# கத்ய த்ரயம் விளக்கம்

(ஶ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்)

1. பகவத் ராமானுஜரின் ஶ்ரீவைகுண்ட கத்யம் - விளக்கம் - ***சூர்ணிகை எண் - 5***

***ததஸ்ச அநுபூயமாந பாவவிசேஷ: நிரதிசய ப்ரீத்யா அந்யத் கிஞ்சித் கர்த்தும் த்ரஷ்டும் ஸ்மர்த்தும் அசக்த: புநரபி சேஷ பாவமேவ யாசமாந: பகவந்தமேவ அவிச்சிந்ந ஸ்ரோதோரூபேண அவலோகநேந அவலோகயந் ஆஸீத*** - ஆத்ம சமர்ப்பணத்துக்குபின்

2. ***சூர்ணிகை பத உரை*** :

# ***ததஸ்ச அநுபூயமாந பாவவிசேஷ: நிரதிசய ப்ரீத்யா*** - இவ்வாறு ஸர்வேஸ்வரன் அருகில் நின்று வணங்கிய பின்னர் எம்பெருமானின் ஸர் ரக்ஷக சக்தியைக் கண்டு வியந்து இதனால் உண்டான மிகிழ்ச்சியால்

# ***அந்யத் கிஞ்சித் கர்த்தும் த்ரஷ்டும் ஸ்மர்த்தும் அசக்த:*** - வேறு எதையும் செய்வதும் பார்ப்பதும் தினைக்கவும் சக்தி அற்றவனாக

# ***புநரபி சேஷ பாவமேவ யாசமாந:*** - பகவத் கைங்கர்யத்தையே மீண்டும் மீண்டும் யாசித்து

# ***பகவந்தமேவ அவிச்சிந்ந ஸ்ரோதோரூபேண*** - எம்பெருமானை நிலைத்த பார்வையோடு

# ***அவலோகநேந அவலோகயந் ஆஸீத*** - எப்போதும் பார்த்துக் கொண்டே இருப்பேன்

3. ***சூர்ணிகை விளக்கம்*** :

# நிரந்தர பகவத் அனுபவமே, அல்பத்வம் அற்றது. இதனை, சாந்தோக்ய உபநிஷத்தில்,

***யோவை பூமா தத் ஸுகம். யத்ர நாந்யத் பச்யதி. நாந்யத் ஸ்ருணோதி. நாந் யத் விஜாநாதி. ஸ பூமா***

என்கிறது சாந்தோக்ய உபநிஷத். இதையே விஷய வாக்யமாகக் கொண்டு, வேதவ்யாஸர் ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

***பூமா ஸம்ப்ரஸாதத்யுபதேஷாத்***

என அருளியிருக்கிறார். அதற்கு ஶ்ரீராமானுஜர் தனது ஶ்ரீபாஷ்யத்தில் விளக்கம் அருளியுள்ளார்.

அதாவது, எல்லையற்றதுமான, மிகச் சிறந்ததுமான, ஆனந்த ரூபமான ப்ருஹ்மத்தை (ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனை), அவனது குணங்களோடும் ஐஸ்வர்யங்களோடும், அனுபவிக்கும் போது அனுபவிப்பவன் வேறொன்றையும் காண்கிறதில்லை; கேட்பதில்லை; அறிகிறதில்லை. காரணம், ஸர்வேஸ்வரனை ஆத்மாவாக கொள்ளாத (ப்ருஹ்மத்தின் ஆதிக்கத்தில் இல்லாத) பொருட்கள் எங்கேயும் கிடையாதபடியால் !

அனுகூலமாய் உள்ள அனைத்தும் ஸுகத்தை கொடுக்கக்கூடியது. அதனால், மேலும் ப்ருஹ்மத்தை விட உயர்ந்த ஸுக அனுபவம் வேறொன்றும் இன்மையால், முக்தன் வேறொன்றையும் காண்கிறதில்லை.

# ஆக, போக்யம் என்கிற வார்த்தை ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனையும் குறிக்கும். ஆக, ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனை அடைய வேண்டிய உயர்ந்த இலக்காக அறியலாம். ஸ்வாமி தேசிகன் ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ***பரிகர விபாக அதிகாரத்தில்*** அருளிச் செய்துள்ளார்.

***தண்ணியரான பிறருடைய பேறே தன் பேறாக்கியும்***

*__குமாரனோடு ஒக்க த்ரியக்கான கிளிக்கு பாலூட்டும் கணக்கிலே__*

அதாவது, கிளியை கூட்டில் வைத்து ரஸிக்கும் ஒருவன், அதற்கு பால் பழம் கொடுத்து, தான் மகிழ்கிறான். அதனால் அவன் ப்ரதானமாக பலனை அடைகிறான் என்பதாயிற்று. ஆனால், பால் பழத்தை சுவைத்து ரஸிப்பதினால், அந்த சேதனான கிளியும், அப்ரதானமாக ஒரு பலனை அனுபவித்தாயிற்று அனறோ!

அது போல, ஜீவர்கள் மோக்ஷத்தை அடைவதில் எம்பெருமான் ப்ரதான பலியாகவும், ஜீவர்கள் அப்ரதான பலியாகவும் ஆகிறார்கள்.

# இவ்விஷயத்தை ஸ்வாமி திருப்பாணாழ்வார், அமலனாதிபிரான் கொண்டும் தெளியலாம் :

*__கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை அண்டர் கோன் அணி அரங்கன் என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே__*

அதாவது,

ஸர்வருக்கும் ஸ்வாமியாய், ஆதாரமாய், நியந்தாவாய் இருக்கும், சக்ரவர்த்தி திருமகனுக்கே ஆராத்ய தெய்வமான அரங்கன், ஸௌலப்யத்தால் வெண்ணை திருடியவனாக அவதரித்தாலும், அவனே பரதத்வம் என்கிற எண்ணம் என் நினைவில் இருந்து எப்போதும் நீங்காது. **அவன் அந்தர்யாமியான ஸகல வஸ்துக்களும் அனுகூலமானவைகளே, என்றபடி.**

*__கொண்டல் வண்ணனை__* - காளமேகம்போன்ற வடிவையுடையனும்

*__கோவலன் ஆய் வெண்ணெய் உண்டவாயன்__* - கோபால குமாரனாகப் பிறந்து வெண்ணெயமுது செய்த திருவாயை யுடையனும்

*__என் உள்ளம்__* - என்னுடைய நெஞ்சை

*__கவர்ந்தானை__* - கொள்ளை கொண்டவனும்

*__அண்டர் கோன்__* - நித்யஸூரிகட்குத் தலைவனும்

*__அணி அரங்கன்__* - (பூமண்டலத்துக்கு) அலங்காரமான திருவரங்கத்தில் கண்வளர்ந்தருள்வபனும்

*__என் அமுதினை__* - எனக்குப் பரமபோக்யமான அம்ருதமாயிருப்பவனுமான அழகிய மணவாளனை

*__கண்ட கண்கள்__* - ஸேவிக்கப்பெற்ற (பரமபத நாதனையும்)

*__காணா__* - .காணமாட்டா

அதாவது, பரமபதத்தில் எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்த பின்னர், வேறு எதிலும் நாட்டம் உண்டாகாது ; ஏனெனில் அப்ருஹ்மாத்மகவான வஸ்துக்கள் என்கிறதொன்று இல்லாத படியால்.

4. ஶ்ரீராமானுஜ க்ரந்தங்களோடு அத்யந்த அர்த்த விரோதம் கொண்டவர்கள் பூர்வபக்ஷிகள், என்பது ப்ரமாண பலத்தால் ஸித்தம் !

# *__ஶ்ரீ ராமானுஜ ஸித்தாந்த பக்ஷம்__* -

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (7-14) கூறும் போது,

**கத்ய த்ரயம் விளக்கம்**

(ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்)

*__தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்ய்யா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே__*

அதாவது, 'என்னுடைய முக்குணங்களாலான ப்ரக்ருதி என்கிற மாயையை கடப்பதற்கு என்னையே சரண் அடைய வேண்டும்', என்கிறான்.

இதனை பகவத் ராமானுஜர் கீதா பாஷ்யத்தில், ஸாத்யோபாயமான பக்தி யோகத்துக்கு அங்கமாக ஓர் ப்ரபத்தியை விவரிக்கிறார்.

# *__ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்__* -

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்துக்கு வ்யாக்யானமான பகவத் ராமானுஜரின் *__ஸ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய கத்யாதிகளில்__*, சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை மோக்ஷ காரணமாக விதித்து வெளியிட்ட போதும், அந்த ஆசார்யோத்தமரின் க்ரந்த விரோதமாக, ஸித்தோபாய ப்ரதிபத்தி மட்டுமே மோக்ஷ காரணம் என்று நிர்தேசிக்கிறார்கள் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், என்பதனை முமுக்ஷூபடி க்ரந்தங்களைக் கொண்டு தெளியலாம் :

*__இந்நினைவு பிறந்த போதே க்ருதக்ருத்யன்__* (எண் -94) - என்றது, 'தனக்கையாக என்னைக் கொள்ள வேணும்' என்னும் இவ்வத்யந்த பாரதந்த்ரிய ப்ரதிபத்தி பிறந்த போதே தன்னுடைய ஹிதத்துக்கு உடலாகச் செய்ய வேண்டுவதெல்லாம் செய்து தலைக் கட்டினவன் என்கை.

வேத மார்க்கமான பகவத் ராமானுஜரால் ஸ்ரீபாஷ்ய கத்யாதிகளில் சாஸ்த்ரீயமான ஸாத்யோபாயத்தை விளக்கி இருக்க, ஸாத்யோபாயத்தை நிஷேதித்து விளக்குவது, பூர்வபக்ஷிகளின் ஸம்ப்ரதாய விரோத நோக்கம். அசாஸ்த்ரீயம்.

# *__ஸ்வாமி தேசிகனின் பக்ஷம்__*

ஸ்வாமி தேசிகன் *__ஸாத்யோபாய சோதன அதிகாரத்தில்__* ,

*__இவை அநாதியான அபசார பரம்பரையாலே உத்பன்னமாய் சம்சார ஹேதுவாய்க் கிடக்கிற நிக்ரஹத்தைச் சமிப்பித்துக் கொண்டு உபகரிக்கின்றன*__

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

*__இவை* -__ ஸாத்யோபாயமான பக்தி யோகம் சரணாகதி அனுஷ்டானமாவது

***அநாதியான அபசார பரம்பரையாலே* -** பல பிறவிகளில், சம்சாரி ஜீவர்கள் செய்த சாஸ்த்திர விதிகளை மீறிய செயல்களால்

***உத்பன்னமாய்* -** ஏற்பட்ட

***சம்சார ஹேதுவாய்க் கிடக்கிற* -** துக்கமயமான சம்சார பந்தத்திற்கு காரணமாகிற

***நிக்ரஹத்தைச்* -** பகவானுடைய சீற்றத்தை

***சமிப்பித்துக் கொண்டு* -** களைய

***உபகரிக்கின்றன* -** காரணமாகிறது - அதாவது, ஸித்தோபாயன் சீற்றத்தை கை விட்டு, சம்சாரி ஜீவர்களுக்கு பரம புருஷார்த்தத்தை, ஸாத்யோபாயத்தை எதிர்பார்த்தே அளிக்கிறான்,என்றாகிறது.

(நாளை ஸ்ரீவைகுண்ட கத்யம் தொடரும்)

*ந தைவம் தேசிகாத் பரம்*

*தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்*

*****

**Visit : https://www.sridesikadarsanam.com/**